# கனடா-காரை கலாசார மன்றம்

## தமிழ்மொழித் திறன் போட்டி – 2017

## சொல்வதெழுதுதல்

## உயர் பிரிவு (தரம்10, தரம்11, தரம்12)

**நடுவர்கள் கூறும் வசனங்களை கவனமாகக் கேட்டு எழுதுதல் வேண்டும்**

சைவமும் தமிழும் பண்பாடும் தழைத்தோங்கும் தங்கோடையைச் சேர்ந்த ஆறுமுகம் அமிர்தவல்லி தம்பதியினருக்கு தியாகராசா அவர்கள் 1916ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17ஆம் திகதி மலேசியாவில் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வி, உயர் கல்வி என்பவற்றை மலேசியாவில் கற்றார். அதனைத் தொடர்ந்து சீனியர் கேம்பிறிச் பரீட்சையில் திறமையாகச் சித்தியடைந்தார். இவரது கல்வியார்வம் காரணமாக பெற்றோர் இவரை சென்னைப் பல்கலைக்கழகத்தில் சேர்த்துப் படிப்பித்தனர். அதனைத் தொடர்ந்து முதுமாணிப் பட்டமும் பெற்றார். பொருளாதாரம், இலக்கியம் ஆகிய பாடங்களில் பரந்த அறிவும் கற்பித்தல் திறமையும் பெற்றிருந்தார். .

திரு.தியாகராசா அவர்கள் காரைநகர் இந்துக் கல்லூரியின் ஆசிரியராக 1941இல் பதவியேற்றார். பின்னர் 16-01-1946இல் அதிபராகக் கடமையேற்றார். கால் நூற்றாண்டு காலம் இக்கல்லூரியின் அதிபராகப் பணியாற்றி கல்லூரியை உன்னதமான நிலைக்கு கொண்டுவர அயராது உழைத்தவர். இவரது காலத்திலேயே கல்லூரி பல்வேறு வளங்களைப் பெற்று விளங்கியதுடன் கல்வித் தரத்திலும் மேம்பட்டு விளங்கியது.

02-04-1970இல் அதிபர் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற தியாகராசா அவர்கள் வட்டுக்கொட்டைத் தொகுதி பாரளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டு இத்தொகுதி மக்களுக்க ஆற்றிய சேவைகள் அளப்பரியனவாகும். தியாகராசா அவர்களால் ஏற்படுத்தப்பட்ட பல்வேறு நலன்புரித் திட்டங்களினால் காரைநகர் புதுப்பொலிவு பெற்றது. குழாய் நீர் விநியோக வசதி, நன்னீர்த் திட்டம், மின்சார வசதி, வீதி அபிவிருத்தி, கல்விவள விருத்தி, வேலை வாய்ப்புக்கள் என்பவற்றை ஏற்படுத்திக்கொடுத்து காரைநகர் மக்கள் மனதில் நீங்காத இடத்தினைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

இவர் எழுதிய தென்னாசியாவின் பொருளாதார ஒத்துழைப்ப என்ற ஆய்வு நூலுக்கு புதுடெல்லி பல்கலைக்கழகம் அன்னாரைக் கௌரவித்து 1979இல் கலாநிதிப் பட்டம் வழங்கியது.இத்தகைய சிறப்புக்கள் பொருந்திய ஒப்பற்ற சேவையாளர் கலாநிதி ஆ.தியாகராசா அவர்கள் 26-05-1981இல் அகால மரணமடைந்தார்.